RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




மாலை தந்தி
MALAI THANTHI
தமிழால் வெல்வோம்
www.malaithanthi.in
DAILY EVENING
மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 247 | செப்டம்பர் 11, 2026 | வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# பொது வாழ்க்கையில் 25 ஆண்டுகளை நிறைவு செய்யும் பிரதமர் மோடி ஒரு மாத சேவை இயக்கத்துக்கு பாஜக ஏற்பாடு

புதுடெல்லி: செப்.11-

பிரதமர் நரேந்திர மோடியின் பொது வாழ்க்கையில் 25 ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு, பாஜக சார்பில் ஒரு மாத காலத்திற்கு 'சேவா சங்கல்ப் அபியான்' என்ற மாபெரும் மக்கள் சேவை இயக்கத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நரேந்திர மோடி கடந்த 2001-ம் ஆண்டு அக்டோபர் 7-ம் தேதி முதன்முறையாக குஜராத் முதல்வராக பதவியேற்றார். தொடர்ந்து, 13 ஆண்டுகள் குஜராத் முதல்வராக பணியாற்றிய அவர், 2014-ம் ஆண்டு மே 26-ம் தேதி நாட்டின் பிரதமராக பதவியேற்றார். பிரதமர் பதவியில் 12 ஆண்டுகளை நிறைவு செய்து, தொடர்ந்து நாட்டுக்கு சேவை செய்து வருகிறார்.

இதன் மூலம் வருகிற அக்டோபர் 7-ம் தேதியுடன் அவர் அரசுப் பதவியில் 25 ஆண்டுகளை நிறைவு செய்ய உள்ளார். இதையொட்டி பாஜக சார்பில் ஒரு மாத காலத்திற்கு 'சேவா சங்கல்ப் அபியான்' என்ற மாபெரும் மக்கள் சேவை இயக்கத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த இயக்கத்துக்காக தேசிய ஒருங்கிணைப்பு குழு அமைக்கப்பட்டுள்ளது.



டெல்லியில் உள்ள பாஜக தலைமையகத்தில் அக்கட்சியின் தேசியத் தலைவர் நிதின் நவீன் செய்தியாளர்களிடம் கூறும்போது, "பிரதமரின் பொதுச் சேவைக்கான அர்ப்பணிப்பைப் பிரதிபலிக்கும் நோக்கம் கொண்ட இந்த மக்கள் சேவை இயக்கம் செப்டம்பர் 17 முதல் அக்டோபர் 17 வரை நடைபெறும்.

இதில் கோடிக்கணக்கான பாஜக தொண்டர்கள் பங்கேற்பார்கள். செப்டம்பர் 17-ம் தேதி நாடெங்கிலும் ஒரு நாள் முழுவதும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ரத்த தான முகாமுடன் இந்த இயக்கம் தொடங்கும்.

அதைத் தொடர்ந்து ஒரு மாத காலத்துக்கு தூய்மைப் பணிகள், மரக்கன்று நடுதல் மற்றும் நலத் திட்டங்களை வழங்குதல் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் தொடரும். இந்த இயக்கத்தில் சாதாரண குடிமக்களும் இணைந்து தங்களால் முடிந்த சேவைகளை செய்ய கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்" என்றார்.



## "தட்டாஞ்சாவடியில் திமுகவுக்கு வலுவான வாக்கு வங்கி உள்ளது" - ஜெகத்ரட்சகன் எம்.பி பிரச்சாரம்

புதுச்சேரி: செப்.11-

"சில கட்சிகள் தினமும் ஒரு கூட்டணிக்கு சென்றாலும் திமுகவுக்கு என்று வலுவான வாக்குகள் இருக்கிறது. அதை முன்னிறுத்தி தேர்தலை சந்திக்க உள்ளோம்" என்று புதுச்சேரி தட்டாஞ்சாவடி இடைத்தேர்தல் பிரச்சாரத்தில் திமுக கொள்கை பரப்பு செயலர் எம்பி ஜெகத்ரட்சகன் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி தட்டாஞ்சாவடி தொகுதி இடைத்தேர்தலில் திமுக வேட்பாளராக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த முன்னாள் நிர்வாகி சேது செல்வம் அறிவிக்கப்பட்டுள்ளார். அவர் வாக்கு சேகரிப்பை இன்று தொடங்கினார். அவருக்கு ஆதரவாக திமுக கொள்கைப் பரப்புச் செயலாளர் ஜெகத்ரட்சகன், தலைமையில் புதுப்பேட்டை வார்டு மாரியம்மன் கோயில் வீதியில் இருந்து பிரச்சாரம் தொடங்கப்பட்டது. இதில், திமுக அமைப்பாளர் சிவா மற்றும் எம்எல்ஏக்கள், நிர்வாகிகள் உள்ளிடோர் உடன் சென்று வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.

தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த ஜெகத்ரட்சகன் எம்பி கூறியதாவது, "திமுகதான் தமிழ்நாட்டிலும் புதுச்சேரியிலும் பலமான கட்சி. திமுக மிகப்பெரிய ஆலமரம் போன்றது. மற்றவர்கள் கூட்டணியில் சேர வந்தால் வரலாம்; அதற்காக திமுக மற்றவர்களைத் தேடிச் செல்ல வேண்டிய அவசியமில்லை. நாங்கள் தனித்து நிற்கிறோம்; தனித்துப் போட்டியிடுகிறோம். திமுக ஒரு மிகப்பெரிய இயக்கம். தனித்து நின்று இந்தத் தொகுதியில் வெற்றி பெறுவோம்.

ஒவ்வொரு நாளும் ஒரு கூட்டணிப் பெயரை அறிவிக்கிறார்கள். அதற்கெல்லாம் நாங்கள் பதில் சொல்லிக் கொண்டிருக்க முடியாது. புதுவை முதல்வர் ரங்கசாமி இத்தொகுதியில் 7 முறை வென்றுள்ளாரே என கேட்கிறீர்கள். அவரை எதிர்த்து எங்களின் வியூகம் என்ன என்பதை தேர்தல் நேரத்தில் தெரிவிப்போம் புதுச்சேரியில் மக்கள் மாற்றத்தை விரும்புகிறார்கள். இடைத்தேர்தலில் அந்த மாற்றம் இருக்கும்.

கடந்த ஆறு மாதங்களாக புதுச்சேரியில் அமைச்சரவை அமைக்க முடியவில்லை; பேரவைத் தலைவர் தேர்தல் கூட நடத்த முடியவில்லை. இத்தகைய இக்கட்டான சூழ்நிலை நிலவுகிறது. தேர்தல் வியூகம் வகுத்து உள்ளோம். சில கட்சிகள் தினமும் ஒரு கூட்டணிக்குச் சென்றாலும் திமுகவுக்கு என்று வலுவான வாக்குகள் இருக்கிறது. அதை முன்னிறுத்தி தேர்தலை சந்திக்க உள்ளோம்.

இந்தத் தொகுதியில் திமுக வெற்றி பெற்றால், புதுச்சேரி அரசில் ஒரு புதிய மாற்றத்தைக் கொண்டு வர முடியும். கூட்டணி இல்லாமல் திமுக களம் காண்பது புதிதல்ல. 1967-க்கு முன்பு கூட்டணிகள் இல்லாமல் தனித் தனியாகத்தான் தேர்தலில் போட்டியிட்டோம். கூட்டணி இருந்தால் நல்லது; இல்லாவிட்டாலும் பரவாயில்லை. நாங்கள் தனித்து நின்று வெல்வோம். திமுக தலைவர் ஸ்டாலின் பிரச்சாரத்துக்கு வருவாரா என்பதை விரைவில் தெரிவிப்போம்" என்று அவர் கூறினார்.

## தாராபுரம் இடைத்தேர்தலில் கணக்கில் வராத ரூ.2.46 லட்சம் பணத்தை பறிமுதல் செய்த பறக்கும் படையினர்!!

திருப்பூர், செப்.11-

தாராபுரம் இடைத்தேர்தலில் கணக்கில் வராத ரூ.2.46 இலட்சம் பணத்தை பறிமுதல் செய்த பறக்கும் படையினர். திருப்பூர் மாவட்டம், தாராபுரம் தனி தொகுதியில் தற்போது இடைத்தேர்தல் நடைபெற்று வருகிறது. இதன் காரணமாக 9 பறக்கும் படை மற்றும் நிலையான கண்காணிப்பு குழுவினர் தொடர்ந்து தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதிகப்படியான பணப் பரிவர்த்தனைகள் நடந்தால் உடனடியாக அவற்றை பறிமுதல் செய்ய தேர்தல் விதிமுறைகளின்படி செயல்பட்டு வருகின்றனர். இந்த சூழ்நிலையில், தாராபுரம் அருகே உள்ள உடுமலை சாலையில் இன்று காலையில் பறக்கும் படையினர் சோதனை மேற்கொண்டபோது, பொள்ளாச்சியிலிருந்து ஆடு வியாபாரம் செய்பவர் வெள்ளக்கோவிலுக்கு ஆடு வாங்குவதற்காக ரூ.2.46 இலட்சம் பணம் எடுத்து சென்றது தெரியவந்தது.

உடனடியாக அவரிடம் அது தொடர்பான ஆவணங்களை கேட்டபோது, அவரிடம் எந்தவிதமான ஆவணங்களும் இல்லாததால், உடனடியாக அந்த பணம் பறிமுதல் செய்யப்பட்டது. பறிமுதல் செய்யப்பட்ட இந்த பணம் தாராபுரம் தாலுகா அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. வேட்புமனு தாக்கல் இரண்டாம் நாளாக நடைபெற்றுவரும் சூழ்நிலையில், முதல் கட்டமாக ரூ.2.46 இலட்சம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

## 'விஜய்யை காவல் துறையினரே வெற்று முதல்வராக நினைக்கிறார்களா?' - உதயநிதி ஸ்டாலின்

சென்னை: செப்.11-

"காவல்துறையிடம் பாதுகாப்பு கேட்டால் கொலை செய்யப்படுவார்கள் என்ற புதிய வரலாற்றை தவெக ஆட்சியாளர்கள் உருவாக்கி இருக்கின்றனர். காவல்துறைக்கு பொறுப்பு வகிக்கும் முதல்வரை காவல்துறையினரே வெற்று முதல்வராக நினைக்கிறார்களா?" என உதயநிதி ஸ்டாலின் வினவியுள்ளார்.



திமுக இளைஞரணி செயலாளரும், சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூக ஊடக பதிவில், "தலைநகர் சென்னையில் மீண்டும் ஒரு கொடூர கொலை அரங்கேறி இருப்பது கடும் அதிர்ச்சி அளிக்கிறது.

'கடன் தொல்லை கொடுக்கிறார்கள்' என பாதுகாப்பு கேட்ட பிரதீப்ராஜ் எனும் இளைஞரை, 'உயிரோடு இருக்க மாட்டடாய்... பொய் வழக்குப் போட்டு உள்ள தள்ளிவிடுவேன்' என்று திருவொற்றியூர் காவல் ஆய்வாளர் மிரட்டியதாக சம்பந்தப்பட்ட இளைஞரே நேற்று முன் தினம் வீடியோ வெளியிட்ட நிலையில், நேற்று அவர் கொலை செய்யப்பட்டு இருக்கிறார்.

'முதல்வர் கிட்ட வேண்டுமானாலும் போய் சொல்லு. என்னை ஒன்றும் செய்ய முடியாது' என்று திருவொற்றியூர் காவல் ஆய்வாளர் சொன்னதாக கொலையாவதற்கு ஒரு நாள் முன்பு பிரதீப்ராஜ் கூறியுள்ளார்.

காவல்துறைக்கு பொறுப்பு வகிக்கும் முதல்வரை காவல்துறையினரே வெற்று முதல்வராக நினைக்கிறார்களா?

காவல்துறையிடம் பாதுகாப்பு கேட்டால் கொலை செய்யப்படுவார்கள் என்ற புதிய வரலாற்றை இந்த தவெக ஆட்சியாளர்கள் உருவாக்கி இருக்கிறார்கள்.

சட்டமன்றத்தில் சட்டம் ஒழுங்கு குறித்து கேள்வி கேட்டால், '1974-இல் என்ன நடந்து தெரியுமா... அமலாக்கத் துறை என்ன செய்தது தெரியுமா' என்று திசைதிருப்பும் முதல்வர், இந்த கொலைக்கு என்ன பதில் வைத்திருக்கிறார்.

இந்த வழக்கில் திருவொற்றியூர் காவல் ஆய்வாளர் உட்பட சம்பந்தப்பட்ட அனைவர் மீதும் வழக்குப்பதிவு செய்வதோடு, சட்டத்தின் முன் நிறுத்தி உரிய தண்டனை பெற்றுத்தர வேண்டும்.

தலைநகரில் மீண்டும் ஒரு கொலை நடக்காமல் இருப்பதற்கு தேவையான கடுமையான நடவடிக்கையை இந்த அரசு எடுக்க வேண்டும்." என தெரிவித்துள்ளார்.

## "சமூக நீதி விடுதிகளில் முழு அளவில் பணியாளர்கள் நியமிக்கப்படுவர்" - அமைச்சர் சம்பத்குமார் உறுதி

கரூர்: செப்.11-

"சமூக நீதி விடுதிகளில் பற்றாக்குறை உள்ள இடங்களில் பணியாளர்கள் முழுமையாக நியமனம் செய்யப்படுவார்கள் என பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சம்பத்குமார் தெரிவித்துள்ளார்.

கரூரில் (செப்.10-ம்) வெங்கக்கல்பட்டியில் உள்ள சமூக நீதி கல்லூரி மாணவியர் விடுதி (எம்பிசி), அருகம்பாளையம் மாணவர் விடுதி (பிசி), மல்லம்பாளையம் சமூக நீதி கல்லூரி மாணவர் விடுதி (எம்பிசி), தாந்தோணிமலை சமூக நீதி மாணவியர் விடுதி (பிசி) ஆகியவற்றில் ஆட்சியர் சி.முத்துக்குமரன் தலைமையில் தமிழக பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் வே.சம்பத்குமார் ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின் போது பால் மற்றும் பால் வள மேம்பாட்டுத்துறை அமைச்சர் விஜயலட்சுமி, கிருஷ்ணராயபுரம் எம்எல்ஏ சத்யா, மாவட்ட வருவாய் அலுவலர் கு.விமல்ராஜ், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அலுவலர் முகமமது பைசல், தவெக மேற்கு மாவட்ட செயலாளர் வி.பி.மதியழகன் உடனிருந்தனர்.



விடுதியில் வழங்கப்படும் உணவினை அமைச்சர்கள் வே.சம்பத்குமார், விஜயலட்சுமி, எம்எல்ஏ சத்யா ஆகியோர் மாணவர்களுடன் அமர்ந்து சாப்பிட்டனர். கழிவறை, குளியறைகளை பார்வையிட்டு மாணவர்களிடம் குறைகளை கேட்டறிந்தனர். இன்று உணவு வழங்குவதுப் போலவே மற்ற நாட்களிலும் வழங்கப்படுகிறதா, உணவின் தரம், வேறு தேவைகள் ஏதும் உள்ளதா என மாணவர்களிடம் கேட்டறிந்தனர்.

தொடர்ந்து, தாந்தோணிமலை சமூக நீதி மாணவியர் விடுதியில் ஆட்சியர் சி.முத்துக்குமரன் தலைமையில் அமைச்சர் சம்பத்குமார் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட உணவை சாப்பிட்டு பார்த்து இட்லி நன்றாக இருப்பதாகவும், ஆனால் சற்று கடினமாக இருப்பதாகவும் தெரிவித்தார். மற்ற நாட்களிலும் சிற்றுண்டி இதுபோல தான் வழங்கப்படுகிறதா என்று கேட்டறிந்தார்.

தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் வே.சம்பத்குமார்: "தமிழகத்தில் இதுவரை 15-க்கும் மேற்பட்ட மாவட்டங்களில் சமூக நீதி விடுதிகளில் ஆய்வு மேற்கொண்டுள்ளோம். வெங்கக்கல்பட்டியில் உள்ள கல்லூரி மாணவி விடுதியில் மாணவிகள் சமையலர் மீது புகார் தெரிவித்திருந்தனர். சமையலர் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளார். மேலும், தவறுகள் தொடர்ந்தால் மேல்நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஆய்வில் உணவு மட்டுமின்றி சுகாதாரம், மாணவ, மாணவிகளுக்கான அடிப்படை வசதிகளை ஆய்வு செய்தோம். மாணவ, மாணவிகளுக்கு தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது அரசின் கடமை. அதனை உணர்ந்து வருங்காலத்தில் அவை மேம்படுத்தப்படும். பள்ளி மாணவர்களுக்கு ரூ.1,400-ஆக இருந்த உணவுப்படி ரூ.1,800 ஆகவும், கல்லூரி மாணவர்களுக்கு ரூ.1,500 ஆக இருந்த உணவுப்படி ரூ.2,000 ஆவும் உயர்த்தப்பட்டுள்ளது.

மாணவர்களின் தேவைகளை கேட்டறிந்து நிறைவேற்றப்படும். உணவு மட்டுமின்றி சுகாதாரத்திற்கும் முக்கியத்துவம் வழங்கப்படும். பணியாளர் பற்றாகுறை உள்ள இடங்களில் முழுமையாக நிரப்பப்படும்.

பள்ளி விடுதிகளில் தேவைக்கு குறைவாகவே மாணவர்கள் உள்ளனர். இவற்றை கல்லூரி விடுதிகளாக மாற்றவும், தரம் உயர்த்தவும் பணிகள் மேற்கொள்ளப்படும். கூடுதலாக விடுதி தேவைப்படும் இடங்களில் இடம் தேர்வு செய்யப்படும். வெங்கக்கல்பட்டி மாணவர் விடுதியில் இருந்து கல்லூரிக்கு பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அரசு பதவியேற்ற 100 நாட்களில் சின்ன, சின்ன விஷயங்களிலும் கவனம் செலுத்தி செயல்படுத்தி வருகிறோம். தவெகவின் நோக்கம் மக்களுக்கு உண்டான தேவைகளை செய்து தருகிறோம். இடைத்தேர்தல்களில் தவெக வெற்றி 100 சதவீதம் உறுதி. பதவியேற்ற 100 நாட்களில் நிறைய மாற்றங்கள் தெரிவதாக மக்கள் சொல்கின்றனர். வெற்றியின் வாசலில் நிற்கிறோம்" என்று அமைச்சர் சம்பத்குமார் கூறினார். முன்னதாக மாவட்ட விளையாட்டு மைதானத்தில் முதல்வர் கோப்பைக்கான 2-ம் நாள் விளையாட்டு போட்டிகளை அமைச்சர்கள் விஜயலட்சுமி, சம்பத்குமார் தொடங்கி வைத்தனர்.




# மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் குறித்த விழிப்புணர்வு

தேனி, செப்.11-

தேனி மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக /நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் இணைந்து நடத்தும் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் குறித்த விழிப்புணர்வு வாகனத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா. வைத்திநாதன்,.துவக்கி வைத்தார்.வருகின்ற சனிக்கிழமை (12.09.2026) அன்று கம்பம், CPUமேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற உள்ள மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில், தமிழகம் முழுவதிலிருந்து சுமார் 200-க்கும் மேற்பட்ட தனியார் துறை நிறுவனங்களில் காலியாகவுள்ள 8000-க்கும் மேற்பட்ட பணியிடங்களுக்கு வேலைநாடுநர்களை தேர்வு செய்யவுள்ளனர்.

மேலும், பல திறன் பயிற்சி அளிக்கும் நிறுவனங்கள் கலந்துகொண்டு திறன் பயிற்சியுடன் கூடிய வேலைவாய்ப்புக்கு வேலைநாடுநர்களை தேர்வு செய்யவுள்ளனர். இம்முகாமில் கலந்துகொள்ள கல்வித்தகுதி 8-ம் வகுப்பு முதல் பட்டப்படிப்பு வரை மற்றும் பி.இ, டிப்ளமோ, ஐடிஐ, மற்றும் இதர கல்வித் தகுதிகளுடைய அனைவரும் பங்கேற்கலாம். இம்முகாமில் பங்கேற்க எவ்விதக் கட்டணமும் இல்லை. இம்மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் கலந்துகொள்ள விரும்பும் வேலைதேடும் இளைஞர்கள் மற்றும் இளம்பெண்கள் தங்களது அனைத்துக் கல்விச் சான்றிதழ்களின் நகல்கள் மற்றும் ஆதார் அட்டை நகல் ஆகியவற்றுடன் கலந்து கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர். ரமாபிரபா, உதவி திட்ட அலுவலர் (மகளிர்திட்டம்) .அன்புராஜா, இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர். சுப்பம்மாள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

# நல்லூர் ஊராட்சியில் பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று சாலையை சரி செய்த த.வெ.க., நிர்வாகி எம்.கார்த்திக்



மாதவரம், செப்.11-

திருவள்ளூர் மாவட்டம், மாதவரம் தொகுதி சோழவரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட நல்லூர் ஊராட்சி பாலமுருகன் நகர் 2வது தெரு அண்மையில் பெய்த மழையால் சாலை முழுவதும் பொதுமக்கள் பயன்படுத்த முடியாத அளவிற்கு மழைநீர் தேங்கி நின்றது. இதனால் பொதுமக்கள் இச்சாலையை பயன்படுத்த மிகவும் சிரமப்பட்டு வந்தனர். இப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் திருவள்ளூர் தென்மேற்கு மாவட்டம், சோழவரம் கிழக்கு ஒன்றியத்திற்குட்பட்ட நல்லூர் ஊராட்சி தவெக நிர்வாகி எம்.கார்த்திக்கை நேரிடையாக சந்தித்து, இத்தெருவை சரி செய்து தருமாறு கோரிக்கை விடுத்தனர்.

பொதுமக்களின் கோரிக்கையை உடனடியாக ஏற்று தவெக நிர்வாகி எம். கார்த்திக் மழைநீர் தேங்கி நின்ற தெருவில் ரப்பீஸ் உள்ளிட்ட தேவையான பொருள்களை கொண்டு நிரப்பி, ஜெபிசி இயந்திரம் மூலம் பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் சரி செய்து கொடுத்தார். இச்செயலை இப்பகுதி பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் வெகுவாகப் பாராட்டினர்.



# டாஸ்மாக் சுமைப்பணி தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்

## பணிக்கு ஏற்ற ஊதியம் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கண்டன முழக்கம்

கிருஷ்ணகிரி, செப்.11-

கிருஷ்ணகிரியில் டாஸ்மாக் டிரான்ஸ்போர்ட் டெலிவரி சுமைப்பணி தொழிலாளர் சங்கம் சார்பில், பணிக்கு ஏற்ற ஊதியம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தமிழ்நாடு சுமைப்பணி தொழிலாளர் சம்மேளனம் மற்றும் டாஸ்மாக் டிரான்ஸ்போர்ட் டெலிவரி சுமைப்பணி தொழிலாளர் ஒருங்கிணைப்புக் குழு சார்பில், கிருஷ்ணகிரி டாஸ்மாக் கிடங்கு முன்பு நேற்று காலை இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மாவட்டத் தலைவர் செந்தில் தலைமை வகித்தார். செயலாளர் வரதராஜன், பொருளாளர் கபீர், துணைப் பொருளாளர் சுரேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். துணைத் தலைவர் வரதராஜன் நன்றி கூறினார்.

ஆர்ப்பாட்டத்தில், டாஸ்மாக் டிரான்ஸ்போர்ட் டெலிவரி சுமைப்பணி தொழிலாளர்களுக்கு லாரியில் மதுபானப் பெட்டிகளை கொண்டு சென்று, கடைகளின் முன்பு இறக்கி வைக்கும் பணிக்கு பெட்டி ஒன்றுக்கு ரூ.10 வழங்க வேண்டும். கடைகளுக்குள் கொண்டு சென்று அட்டி போட்டு அடுக்கி வைக்கும் பணிக்கு பெட்டி ஒன்றுக்கு ரூ.5 வழங்க வேண்டும்.

மேலும், ஓட்டுநர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.1,000 ஊதியம் வழங்க வேண்டும். அனைத்து டிரான்ஸ்போர்ட் டெலிவரி சுமைப்பணி தொழிலாளர்களுக்கும் சட்டப்படி பி.எப்., இ.எஸ்.ஐ. உள்ளிட்ட சமூகப் பாதுகாப்பு திட்டங்களை அமல்படுத்த வேண்டும்.

மதுபானப் பெட்டிகளை லாரிகளில் கொண்டு செல்லும்போது உடைந்து போகும் மதுபாட்டில்களுக்கான தொகையை தொழிலாளர்களிடம் வற்புறுத்தி வசூலிப்பதை உடனடியாக நிறுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தொழிலாளர்கள் கண்டன முழக்கங்களை எழுப்பினர்.வேண்டுமெனில் இதை தினகரன்/ தினத்தந்தி பாணியில் இன்னும் சுருக்கமான செய்தியாகவும், தலைப்பு + துணைத்தலைப்புடன் மாற்றித் தரலாம்.

# உதகை எச்.ஏ.டி.பி விளையாட்டு மைதானத்தில் முதலமைச்சர் கோப்பைக்கான மாவட்ட அளவிலான விளையாட்டு போட்டியினை மாவட்ட ஆட்சித்தலைவர் துவக்கி வைத்தார்

நீலகிரி, செப்.11-

நீலகிரி மாவட்டம் உதகை எச்.ஏ.டி.பி விளையாட்டு மைதானத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை சார்பில், முதலமைச்சர் கோப்பைக்கான மாவட்ட அளவிலான விளையாட்டு போட்டிகளை, மாவட்ட ஆட்சித்தலைவர்லட்சுமி பவ்யா தண்ணீரு துவக்கி வைத்து தெரிவிக்கையில்:-

"தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை" விளையாட்டு போட்டிகள் தேசிய அளவில் நடத்தப்படும் போட்டிகளுக்கு இணையாக சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது. இவ்வாண்டில் நடத்தப்பட இருக்கும் போட்டிகளில் வெவ்வேறு புதிய விளையாட்டுக்கள் சேர்க்கப்பட்டு பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர், மாற்றுத் திறனாளிகள், பொதுமக்கள் மற்றும் அரசு ஊழியர்கள் என 5 பிரிவுகளில் 37 விளையாட்டுக்கள் 45 வகைகளில் மாவட்ட, மண்டல மற்றும் மாநில அளவிலான தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ளது. மாவட்ட அளவிலான மாண்புமிகு முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளில் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடத்தில் வெற்றி பெறுபவர்களுக்கு தலா ரூ.3,000/-, ரூ.2,000/- ரூ.1,000/- பரிசுத் தொகை வழங்கப்படவுள்ளது.





மேலும், இப்போட்டிகளில் மாநில அளவில் தனிநபர் போட்டியில் வெற்றி .75 பெறுபவர்களுக்கு முதல் பரிசாக தலா ரூ.1 இலட்சமும், இரண்டாம் பரிசாக ஆயிரமும், மூன்றாம் பரிசாக ரூ.50 ஆயிரமும் வழங்கப்படவுள்ளது. அதேபோன்று குழு போட்டிகளில் பங்கு பெற்று வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக தலா ரூ.75 ஆயிரமும், இரண்டாம் பரிசாக தலா ரூ.50 ஆயிரமும், மூன்றாம் பரிசாக தலா ரூ.25 ஆயிரமும் பரிசாக வழங்கப்பட உள்ளது.

நமது மாவட்டத்தில், மாவட்ட அளவிலான மாண்புமிகு முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகள் இன்று (09.09.2026) முதல் 25.09.2026 வரை நடைபெற உள்ளது. இப்போட்டிகளில் பங்கேற்று மாநில அளவில் நடைபெறும் விளையாட்டு போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்று நமது மாவட்டத்திற்கு பெருமை சேர்க்க வேண்டும் என தெரிவித்தார்.

மேலும், மாண்புமிகு முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டியில் பள்ளி ஆண்கள் பிரிவில் டேபிள் டென்னிஸ் விளையாட்டு போட்டியில் 93 பேரும், பள்ளி மாணவியர்களுக்கான டேபிள் டென்னிஸ் போட்டியில் 35 பேரும், கல்லூரி ஆண்களுக்கான டேபிள் டென்னிஸ் போட்டியில் 18 பேரும், கல்லூரி மாணவியர்களுக்கான டேபிள் டென்னிஸ் போட்டியில் 15 பேரும், கல்லூரி ஆண்களுக்கான கூடைப்பந்து போட்டியில் 9 அணிகள் கொண்ட 104 பேரும், கல்லூரி மாணவியர்களுக்கான கூடைப்பந்து போட்டியில் 7 அணிகள் கொண்ட 74 பேரும், கல்லூரி மாணவர்களுக்கான கால்பந்து போட்டியில் 21 அணிகள் கொண்ட 360 பேரும், கல்லூரி பெண்களுக்கான கால்பந்து போட்டியில் 6 அணிகள் கொண்ட 101 பேரும்இ பள்ளி ஆண்களுக்கான பிரிவில் கொ-கொ போட்டிகளில் 260 பேரும், கல்லூரி ஆண்களுக்கான கிரிக்கெட் போட்டியில் 8 அணிகள் கொண்ட 147 பேரும், பள்ளி மாணவர்கள் பிரிவில் ஆண்களுக்கான கேரம் விளையாட்டு போட்டியில் 372 பேரும், பள்ளி மாணவியர்களுக்கான கேரம் விளையாட்டுப் போட்டியில் 132 பேர் என மேற்குறி ப்பிட்டுள்ள விளையாட்டுப் போட்டிகளில் சுமார் 1711-மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருநாவுக்கரசு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் சௌந்தர்ராஜன், மாவட்ட இளைஞர் மற்றும் விளையாட்டு நல அலுவலர் .இந்திரா, உடற்கல்வி ஆய்வாளர்கள், பயிற்சியாளர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள், மாவட்ட விளையாட்டு சங்கங்கள், விளையாட்டு சங்க உறுப்பினர்கள் மற்றும் வீரர் வீராங்கனைகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# முத்து பிடாரி அம்மன் கோவில் திருவிழா

கிருஷ்ணகிரி, செப்.11-

கிருஷ்ணகிரி காட்டிநாயனப்பள்ளி முருகன் கோவில் அருகே முருகன் நகரில் அமைந்துள்ள முத்து பிடாரி அம்மன் கோவில் திருவிழா கடந்த 7-ம் தேதி காலை கங்கணம் கட்டுதல் மற்றும் கணபதி ஹோமத்துடன் தொடங்கியது.

தொடர்ந்து, நேற்று முன்தினம் ஏராளமான பெண்கள் அம்மனுக்கு கூழ் ஊற்றி நேர்த்திக்கடன் செலுத்தினர். இரவு பக்தி பஜனை பாடல் நிகழ்ச்சி நடைபெற்றது.

நேற்று காலை ராஜகணபதி, உக்கிர முனியாண்டி, நாககன்னி, ஜலகன்னியம்மன் மற்றும் முத்துபிடாரி அம்மன் ஆகிய சுவாமிகளுக்கு சிறப்பு பூஜைகளும், கங்கை பூஜையும் நடைபெற்றன. இதையொட்டி முத்துபிடாரி அம்மன் சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

தொடர்ந்து, திரளான பக்தர்கள் கோவில் முன்பு பொங்கல் வைத்து அம்மனுக்கு படையலிட்டு வழிபட்டனர். பின்னர், சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான பெண்கள் மாவிளக்கு மற்றும் கரகத்துடன் ஊர்வலமாக கோவிலுக்கு வந்து அம்மனை வழிபட்டனர்.

இதையடுத்து, ஏராளமான பக்தர்கள் ஆடு, கோழிகளை பலியிட்டு தங்களது நேர்த்திக்கடனை நிறைவேற்றினர்.



# கிருஷ்ணகிரியில் முதலமைச்சர் கோப்பைக்கான பள்ளி மாணவ, மாணவிகளுக்கு மாவட்ட அளவிலான விளையாட்டு போட்டிகள் துவங்கியது

## 5,648 மாணவ, மாணவிகள் பங்கேற்றனர்

கிருஷ்ணகிரி, செப்.11-

கிருஷ்ணகிரியில் முதலமைச்சர் கோப்பைக்கான பள்ளி மாணவ, மாணவிகளுக்கு மாவட்ட அளவிலான விளையாட்டு போட்டிகளில் 5,648 மாணவ, மாணவிகள் பங்கேற்றனர்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில், முதலமைச்சர் கோப்பைக்கான, பள்ளி மாணவ, மாணவிகளுக்கு, மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நேற்று துவங்கியது. இதில், தடகளம், இறகுப்பந்து, கூடைப்பந்து, கேரம், சதுரங்கம், கையுந்துபந்து, ஹாக்கி, கோ கோ, யோகாசனம், கிரிக்கெட், கால்பந்து, சிலம்பம், நீச்சல், மேசைப்பந்து, கையுந்துபந்து ஆகிய விளையாட்டு போட்டிகள், கிருஷ்ணகிரி மாவட்ட விளையாட்டு அரங்கம், ஓசூர் அந்திவாடி மினி விளையாட்டு அரங்கம், ஓசூர் அதியமான் பொறியியல் கல்லூரி, கந்திகுப்பம் கிங்ஸ்லி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, நாகரசம்பட்டி மற்றும் காவேரிப்பட்டணம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, கிருஷ்ணகிரி அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி மற்றும் அரசு ஆடவர் கலைக்கல்லூரி ஆகிய இடங்களில் போட்டிகள் துவங்கப்பட்டன.

கிருஷ்ணகிரி மாவட்ட விளையாட்டு அரங்கில், கலெக்டர் தினேஷ்குமார் போட்டிகளை துவக்கி வைத்து பார்வையிட்டார். மாவட்ட விளையாட்டு அலுவலர் (பொ) நடராஜ முருகன் உள்பட பலர் கலந்து கொண்டனர். நேற்று நடந்த போட்டியில், தடகளத்தில், மாணவர்கள் 1020 பேர், கையுந்து பந்து போட்டியில் 1320 பேர், இறகுபந்து போட்டியில் 370 பேர், கூடைப்பந்து போட்டியில் 765, மேசைப்பந்து போட்டியில் 110 பேர், சிலம்பம் போட்டியில் 314 பேர், சதுரங்க போட்டியில் 339 பேர், யோகா போட்டியில் 70 பேர், நீச்சல் போட்டியில் 287 பேர், ஹாக்கி போட்டியில் 162 பேர், கால்பந்து போட்டியில் 900 பேர் என மொத்தம், 5,648 மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

# சென்னை மருத்துவ கல்லூரியில் 1976-ம் ஆண்டு பயின்ற 110 மருத்துவர்கள் தங்களின் மருத்துவ படிப்பு முடிந்து 50 ஆண்டுகள் நிறைவுறுவதை சிறப்பாக நினைவு கூற சந்திப்பு கூட்டம்

சென்னை, செப்.11-

உலக புகழ் பெற்ற இந்தியாவின் தலைசிறந்த மருத்துவ கல்லூரியான சென்னை மருத்துவ கல்லூரியில் 1976-ம் ஆண்டு பயின்ற 110 மருத்துவர்கள் தங்களின் மருத்துவ படிப்பு முடிந்து 50 ஆண்டுகள் நிறைவுறுவதை சிறப்பாக நினைவு கூற வேண்டும் என்ற உயரிய நோக்கில் சென்னை அடுத்த மகாபலிபுரத்திலுள்ள தாஜ்பிஷர்மென் அன் கோவ் ஒட்டலில் வரும் 11 வெள்ளி அன்று கூட உள்ளனர்.

இந்நிகழ்வை அம்பத்தூர் பிளம் மருத்துவமனை தலைவர் மற்றும் எலும்பு முறிவு சிறப்பு மருத்துவர் டாக்டர். மகேந்திரன் அவர்கள் முன்னெடுத்து ஒருங்கிணைத்து வருகின்றார் .

வரலாற்று சிறப்புமிக்க சென்னை மருத்துவ கல்லூரியில் பயின்ற மாணவர்களில் இந்த ஆண்டு சேர்ந்த மாணவர்களுக்கு ஒரு தனி சிறப்பு உண்டு.

இவர்கள் அனைவரும் எமர்ஜென்சி காலத்தில் மருத்துவ கல்வி பயில கல்லூரியில் சேர்ந்தவர்கள். தற்போது பல்வேறு துறைகளில் வல்லுனர்களாக தமிழ்நாடு மற்றும் இந்தியாவின் பிற மாநிலங்கள் அதோடு மட்டுமல்லாமல் உலகின் பல்வேறு நாடுகளில் மிகவும் பிரசித்தி பெற்ற மருத்துவர்களாக சிறப்பாக பணியாற்றி வருகின்றனர்.

இவர்கள் அனைவரும் தாங்கள் கல்லூரியில் சேர்ந்து 50 வருடங்கள் ஆன முத்தான நிகழ்வை பல்வேறு நாடுகளில் இருந்து தங்களின் தாய் நாட்டிற்கு வந்து தங்களது கல்லூரி கால நினைவுகளையும் வரலாற்று சிறப்புமிக்க சென்னை மருத்துவக் கல்லூரியின் பெருமைகளையும் பற்றி கலந்துரையாட உள்ளனர்.

இது வெறும் மருத்துவர்கள் சந்திப்பாக மட்டும் இருந்துவிடக் கூடாது என்று எண்ணிய இவர்கள் சமூக நோக்கோடு சமூகத்தில் கைவிடப்பட்ட பெண்களுக்கு கண்ணியமான வாழ்வை உருவாக்கும் 5 “பிங்க் ஆட்டோ” களை அன்றைய தினம்

“குழந்தைகளுடன் இருக்கும் கணவனை இழந்த பெண்கள், வேலைவாய்ப்பின்றி வாழ்வாதாரம் இழந்தவர்கள், மதுவுக்கு அடிமையான கணவர்களால் தாக்கப்பட்டு கைவிடப்பட்ட பெண்கள் 5 பேருக்கு தங்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்ளும் வகையில் டாக்டர் மகேந்திரன் அவர்கள் அங்கம் வகிக்கும் ரோட்டரி கிளப் சென்னை எஸ்பிளனேடு கிளை மூலம் வழங்கிட உள்ளார்கள். அதாவது தங்களது வாழ்க்கையை கண்ணியத்துடனும், சுயசார்புடனும் நடத்துவதற்கு அவர்களுக்கு பிங்க் ஆட்டோ ஒரு வாழ்வாதார வாய்ப்பாக அமையும் என்பதே இவர்களின் முக்கிய நோக்கமாகும்.”

இந்த சமூக சேவை நிகழ்வை இதோடு நிறுத்தி விடாமல் இனி வருங்காலங்களிலும் இதுபோன்ற தங்களால் இயன்ற உதவிகளை செய்ய இவர்கள் முடிவு செய்துள்ளனர்.

எனவே வரும் 11ஆம் தேதி இந்த மருத்துவர்கள் சங்கமிக்கும் சங்கமம் இதில் பங்கேற்கும் 110 மருத்துவர்களுக்கு மட்டுமல்ல சென்னை மருத்துவக் கல்லூரியில் பயின்ற ,பயின்று வரும் மாணவர்களுக்கும் மிகப்பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ளது என்பதில் எந்தவித மாற்றுக் கருத்தும் இல்லை

# மதுராந்தகத்தில் மரகதம் குமாரவேல், தாராபுரத்தில் சத்தியபாமா போட்டி ; த.வெ.க., வேட்பாளர்கள் அறிவிப்பு



சென்னை, செப்.11-

மதுராந்தகம் மற்றும் தாராபுரம் சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் அக்டோபர் 6-ம் தேதி நடைபெறும் என்று இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள நிலையில் அத்தொகுதிகளுக்கான வேட்பாளர்களை தவெக அறிவித்துள்ளது.

அதன்படி மதுராந்தகம் (தனி) தொகுதியில் மரகதம் குமாரவேல், தாராபுரம் (தனி) தொகுதியில் சத்தியபாமா போட்டியிடுவார்கள் என்று தவெக தலைவர் விஜய் அறிவித்துள்ளார்.

இது குறித்து முதல்வரும், தவெக தலைவருமான விஜய் வெளியிட்டுள்ள அறிக்கையில், "வருகிற அக்டோபர் 6 அன்று நடைபெறவுள்ள மதுராந்தகம் (தனி), தாராபுரம் (தனி) ஆகிய சட்டப்பேரவை தொகுதிகளின் இடைத்தேர்தலில் மதச்சார்பற்ற சமூகநீதி வெற்றிக் கூட்டணி சார்பில் தவெக வேட்பாளர்களாக மதுராந்தகம் (தனி) - மரகதம் குமாரவேல், தவெக துணைப் பொதுச் செயலாளர், தாராபுரம் (தனி) - சத்தியபாமா, திருப்பூர் தென்கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

தவெகவினர் அனைவரும் வெற்றி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு வேட்பாளர்களுக்கு வாக்கு சேகரித்து, வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியை பெற்றுத்தர வேண்டுகிறேன்," என்று குறிப்பிட்டுள்ளார்.

சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு ஏற்பட்ட அரசியல் சூழல் காரணமாக அதிமுகவைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் சிலர் தங்கள் பதவியை ராஜினாமா செய்துவிட்டு தவெகவில் இணைந்தனர்.

அதிமுக எம் எல் ஏ-க்களாக தேர்ந்தெடுக்கப் பட்ட மதுராந்தகம் மரகதம் குமரவேல், தாராபுரம் சத்தியபாமா, பெருந்துறை ஜெயக்குமார், அம்பாசமுத்திரம் இசக்கி சுப்பையா, விராலிமலை சி.விஜயபாஸ்கர், கரூர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் ஆகியோர் தங்கள் சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினமா செய்வதாக சபாநாயகர் ஜே.சி.டி. பிரபாகரிடம் கடிதம் கொடுத்துவிட்டு தவெகவில் இணைந்தனர். இவர்களின் ராஜினாமாவை பேரவைத் தலைவர் ஜே.சி.டி. பிரபாகர் ஏற்றுக் கொண்டதையடுத்து அந்த தொகுதிகள் காலியானதாக அறிவிக்கப்பட்டன.

இந்நிலையில், மதுராந்தகம், தாராபுரம் ஆகிய தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டது.

அதன்படி வேட்புமனு தாக்கல் செப்.9 (நேற்று) தொடங்கியது. வேட்புமனு தாக்கல் செய்ய செப்.16 கடைசி நாள். வேட்புமனு மீதான பரிசீலனை செப்.17-ம் தேதி நடைபெறும். வேட்புமனுவை திரும்பப் பெற செப்.19 கடைசி நாள். தேர்தலில் பதிவான வாக்குகள் அக்.-9ம் தேதி எண்ணப்படுகிறது.

தவெக ஆட்சி அமைந்த பின்னர் நடைபெறும் முதல் இடைத்தேர்தல் என்பதால், இதன் மீது மிகுந்த எதிர்பார்ப்பு ஏற்பட்டது. இந்நிலையில், வேட்புமனு தொடங்கிய நாளான நேற்று, திமுக இந்த இரண்டு தொகுதிகளுக்கும் வேட்பாளர்களை அறிவித்தது. மதுராந்தகத்தில் இ.பரந்தாமன், தாராபுரத்தில் எஸ்.சுகன்யா ஆகியோரை திமுக வேட்பாளர்களாக அறிவித்தது. இதில் பரந்தாமன் திமுகவின் சட்டத்துறை இணைச் செயலாளராக பொறுப்பு வகிக்கிறார்.

மூத்த வழக்கறிஞரான இவர், 2021 சட்டப்பேரவைத் தேர்தலில் சென்னை எழும்பூர் தொகுதியில் திமுக சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர். தற்போது 2-வது முறையாக அவருக்கு தேர்தலில் போட்டியிட வாய்ப்பு தரப்பட்டுள்ளது.

கொங்கு மண்டலத்தைச் சேர்ந்த சுகன்யாவும் வழக்கறிஞர். திமுகவில் மகளிரணி நிர்வாகியான இவருக்கு, இம்முறை தாராபுரம் தொகுதியில் போட்டியிட தலைமை வாய்ப்பு அளித்தது.

இதனைத் தொடர்ந்து தவெகவும் இன்று வேட்பாளர்களை அறிவித்துள்ளது. தவெக வேட்பாளர்கள் இருவருமே அத்தொகுதியில் வெற்றி பெற்று பின்னர் பதவியை ராஜினாமா செய்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.





# முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளை தொடங்கி வைத்த எம்.எல்.ஏ. இளங்கோவன்

சிவகங்கை, செப்.11-

சிவகங்கை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் சிவகங்கை மாவட்டத்தில் நடைபெற்ற முதலமைச்சர் கோப்பைக்கான பல்வேறு விளையாட்டுப் போட்டிகளை, மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் இளங்கோவன் தொடங்கி வைத்தார்.

இதன் ஒரு பகுதியாக நடைபெற்ற ஓட்டப்பந்தயத்தையும் கொடியசைத்து தொடங்கி வைத்த அவர், போட்டிகளில் பங்கேற்ற வீரர், வீராங்கனைகளுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

# கிருஷ்ணகிரியில் 12-ம் தேதி தி.மு.க., சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்

## திமுக கிழக்கு மாவட்ட செயலாளர் மதியழகன் அறிக்கை



கிருஷ்ணகிரி, செப்.11-

சட்டமன்றத்தில் முதலமைச்சர் விஜய் பேசியதாகக் கூறப்படும் ஆணவப் பேச்சைக் கண்டித்து, ஒருங்கிணைந்த கிருஷ்ணகிரி மாவட்ட திமுக சார்பில் வரும் 12-ம் தேதி மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

இதுதொடர்பாக கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் தே. மதியழகன், முன்னாள் எம்.எல்.ஏ., மற்றும் மேற்கு மாவட்ட திமுக செயலாளர் ஒய். பிரகாஷ், முன்னாள் எம்.எல்.ஏ., ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழக சட்டமன்றம் மக்களின் உரிமைகள், வாழ்வாதாரம் மற்றும் மக்கள் பிரச்சினைகள் குறித்து விவாதிக்க வேண்டிய ஜனநாயகத்தின் உயரிய மன்றமாகும். ஆனால், மக்கள் பிரச்சினைகளுக்குப் பதிலளிக்க வேண்டிய சட்டமன்றத்தில் அரசியல் வசனங்கள் பேசப்படுவது கண்டனத்திற்குரியது என தெரிவித்துள்ளனர்.

மேலும், திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட திமுக தலைவர்களின் அரசியல் வரலாறு மற்றும் தியாகங்களை கொச்சைப்படுத்தும் வகையில் முதலமைச்சர் விஜய் பேசியதாகவும், இதனை திமுக தொண்டர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"சட்டமன்றம் சினிமா வசனம் பேசும் மேடை அல்ல; அது மக்களின் உரிமைகளைப் பேச வேண்டிய ஜனநாயக மன்றம்" எனக் குறிப்பிட்டுள்ள அவர்கள், மக்கள் கேட்பது வசனம் அல்ல—வளர்ச்சி; விளம்பரம் அல்ல — நல்லாட்சி; சட்டமன்றத்திற்குத் தேவை ஆணவம் அல்ல— ஜனநாயக மாண்பு என தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து, முதலமைச்சரின் பேச்சைக் கண்டித்து, வரும் 12.09.2026 சனிக்கிழமை காலை 10 மணியளவில், கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அருகே உள்ள பேரறிஞர் அண்ணா சிலை முன்பு மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் தே. மதியழகன் தலைமையிலும், மேற்கு மாவட்டச் செயலாளர் ஒய். பிரகாஷ் முன்னிலையிலும் நடைபெறும் இந்த ஆர்ப்பாட்டத்தில் திமுக மூத்த நிர்வாகிகள், முன்னாள் நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட மற்றும் ஒன்றிய நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் திமுக தொண்டர்கள் திரளாக கலந்து கொள்ள வேண்டும் என அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஆர்ப்பாட்டத்தில் "வரலாற்றை கொச்சைப்படுத்தாதே! சட்டமன்றத்தின் மாண்பைக் காப்பாற்று! ஆணவப் பேச்சை நிறுத்து!" என்ற முழக்கங்களை எழுப்பி கண்டனத்தை பதிவு செய்ய உள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தாராபுரம் இடைத்தேர்தலில் கணக்கில் வராத ரூ.2.46 லட்சம் பணத்தை பறிமுதல் செய்த பறக்கும் படையினர்!



திருப்பூர், செப்.11-

தாராபுரம் இடைத்தேர்தலில் கணக்கில் வராத ரூ.2.46 இலட்சம் பணத்தை பறிமுதல் செய்த பறக்கும் படையினர். திருப்பூர் மாவட்டம், தாராபுரம் தனி தொகுதியில் தற்போது இடைத்தேர்தல் நடைபெற்று வருகிறது. இதன் காரணமாக 9 பறக்கும் படை மற்றும் நிலையான கண்காணிப்பு குழுவினர் தொடர்ந்து தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதிகப்படியான பணப் பரிவர்த்தனைகள் நடந்தால் உடனடியாக அவற்றை பறிமுதல் செய்ய தேர்தல் விதிமுறைகளின்படி செயல்பட்டு வருகின்றனர். இந்த சூழ்நிலையில், தாராபுரம் அருகே உள்ள உடுமலை சாலையில் இன்று காலையில் பறக்கும் படையினர் சோதனை மேற்கொண்டபோது, பொள்ளாச்சியிலிருந்து ஆடு வியாபாரம் செய்பவர் வெள்ளக்கோவிலுக்கு ஆடு வாங்குவதற்காக ரூ.2.46 இலட்சம் பணம் எடுத்து சென்றது தெரியவந்தது.

உடனடியாக அவரிடம் அது தொடர்பான ஆவணங்களை கேட்டபோது, அவரிடம் எந்தவிதமான ஆவணங்களும் இல்லாததால், உடனடியாக அந்த பணம் பறிமுதல் செய்யப்பட்டது. பறிமுதல் செய்யப்பட்ட இந்த பணம் தாராபுரம் தாலுகா அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. வேட்புமனு தாக்கல் இரண்டாம் நாளாக நடைபெற்றுவரும் சூழ்நிலையில், முதல் கட்டமாக ரூ.2.46 இலட்சம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

# திருமாவளவனுக்கு 'இசட்' பிரிவு பாதுகாப்பு வழங்க கோரிக்கை

## தமிழக அரசு அறிக்கை தர உத்தரவு

சென்னை, செப்.11-

விசிக தலைவர் திருமாவளவனுக்கு 'இசட்' பிரிவு பாதுகாப்பு வழங்க கோரிய மனு தொடர்பாக, தமிழக அரசு விரிவான அறிக்கை தாக்கல் செய்ய தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல ஆணையம் உத்தரவிட்டுள்ளது.விழுப்புரம் மாவட்டம் உளுந்தூர்பேட்டையில் விசிக சார்பில் தமிழ் தேசிய எழுச்சி மாநாடு கடந்த மாதம் 17-ம் தேதி நடைபெற்றது. மாநாட்டு மேடைக்கு திருமாவளவன் வந்தபோது, பலர் அவரை சூழ்ந்துகொண்டு செல்ஃபி எடுக்க முயன்றதால் கடுமையான நெரிசல் ஏற்பட்டது.

கூட்டம் கட்டுக்கடங்காமல் மேடையை நோக்கி முண்டியடித்ததில், அவருக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டு மயக்கமடையும் சூழல் உருவானது. இதையடுத்து, அவர் தனது உரையை சுருக்கமாக முடித்துக் கொண்டு அங்கிருந்து உடனடியாக வெளியேறினார்.



தொடர்ந்து, 'மாநாட்டு மேடையில் ஏற்பட்ட இந்த நெரிசல் இயல்பாக நடந்த சம்பவம் அல்ல, சமூக விரோதிகள் சிலரால் திட்டமிட்டு தூண்டி விடப்பட்ட சதி போல தோன்றுகிறது' என விசிக சார்பில் கள்ளக்குறிச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் அளிக்கப்பட்டது.இந்நிலையில், சென்னை வேளச்சேரியைச் சேர்ந்த வழக்கறிஞர்கள் ராஜேந்திரன் மற்றும் நெப்போலியன், "உளுந்தூர்பேட்டை சம்பவத்தை சுட்டிக்காட்டி, திருமாவளவனுக்கு துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்பு மற்றும் 'இசட்' பிரிவு பாதுகாப்பு வழங்க வேண்டும்.மாநாட்டு மேடை சம்பவம் குறித்து உரிய விசாரணை நடத்த உத்தரவிட வேண்டும்" என சென்னையில் உள்ள தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல ஆணையத்தில் மனுத் தாக்கல் செய்தனர்.இந்த மனுவை விசாரித்த ஆணையத்தின் உறுப்பினர்கள் ஆனந்தராஜா, இளஞ்செழியன் ஆகியோர் அடங்கிய அமர்வு, இந்த விவகாரம் தொடர்பாக உரிய விசாரணை மேற்கொண்டு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த விரிவான அறிக்கையை தமிழக அரசின் தலைமைச் செயலர், உள்துறை செயலர் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆகியோர் அக்.5-க்குள் தாக்கல் செய்ய வேண்டும் என உத்தரவிட்டனர்.

# முதலில் வேடிக்கை பார்த்துவிட்டு, பின்னர் தனது கதாநாயக சாகசங்களை காட்டலாம் என்று முதல்வர் விஜய் திட்டமா?



சென்னை, செப்.11-

சென்னையில் நாள்தோறும் தொடரும் கொலை சம்பவங்களால் இப்படி ஒரு சந்தேகம் எழுவதை தவிர்க்க முடியவில்லை என்று திமுக எம்.பி கனிமொழி கூறியுள்ளார். தான் ஒரு முன்னாள் கதாநாயகன் என்பதால், திரைப்படங்களில் காட்டப்படுவதைப் போல, முதலில் கொடூரக் கொலைகள் அரங்கேறுவதை வேடிக்கை பார்த்துவிட்டு, பின்னர் தனது கதாநாயக சாகசங்களை காட்டலாம் என்று முதல்வர் விஜய் ஏதேனும் திட்டம் வைத்திருக்கிறாரா? என்று அவர் கூறியுள்ளார்.

# இசையமைப்பாளர் இளையராஜா மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு;

## டெல்லி உயர் நீதிமன்றம் நோட்டீஸ்




டெல்லி, செப்.11-

பதிப்புரிமை உத்தரவை மீறி பாடல்களை தொடர்ந்து பயன்படுத்தியதாக தொடரப்பட்ட வழக்கில் இசையமைப்பாளர் இளையராஜாவுக்கு டெல்லி உயர்நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது. நீதிமன்றம் ஏற்கனவே விதித்த தடையை மீறி, இளையராஜா தொடர்ந்து பாடல்களுக்கு உரிமை கோரி வருவதாக கூறி சரிகம நிறுவனம் வழக்கு தொடர்ந்துள்ளது. 134 திரைப்படங்களின் பாடல்களைப் பயன்படுத்தவோ, உரிமை கோரவோ கூடாது என்ற நீதிமன்றத்தின் தடையை மீறி இளையராஜா தொடர்ந்து பாடல்களைப் பயன்படுத்தி உரிமை கொண்டாடியதாக சரிகம தரப்பில் குற்றம் சாட்டப்பட்டு உள்ளது.

நீதிமன்றத்தின் தடையுத்தரவை மீறி, இளையராஜா தரப்பில் 134 திரைப்படங்களின் பாடல்கள் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வருவதாகச் சரிகம நிறுவனம் குற்றம் சாட்டியுள்ளது. Spotify மற்றும் YouTube போன்ற தளங்களில் இன்னும் அந்தப் பாடல்கள் இளையராஜா சார்ந்த பக்கங்களில் நீடிப்பதாக ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன

நீதிமன்றத்தின் பதிப்புரிமை உத்தரவை மீறியுள்ள இளையராஜா மீது நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை எடுக்கவும் சரிகம நிறுவனம் கோரியுள்ளது. இந்த மனுவை விசாரித்த டெல்லி உயர்நீதிமன்றம், மனுதாரர் புகாருக்கு பதிலளிக்குமாறு இளையராஜாவுக்கு நோட்டீஸ்

# அமைச்சர் செங்கோட்டையனை சந்திக்க அனுமதி மறுப்பு; விரக்தியில் போலீஸை கண்டித்து போராடிய காங்கிரஸ் கட்சியினர்



நாகை,செப்.11-

நாகப்பட்டினத்தில் அமைச்சர் செங்கோட்டையனை சந்திந்தித்து மனு அளிக்க வந்த காங்கிரஸ் கட்சி முன்னாள் எம்பி ராஜேந்திரன் உள்ளிட்ட காங்கிரஸ் கட்சியினருக்கு போலீசார் அனுமதி மறுத்ததால் அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

காவல்துறையை கண்டித்து கலெக்டர் அலுவலகத்தை முற்றுகையிட்டு காங்கிரஸ் கட்சியினர் போராட்டம் நடத்தினர். நாகப்பட்டினம் திட்ட இயக்குனர் பாலமுருகனிடம் கடந்த 8ம் தேதி காங்கிரஸ் கட்சி முன்னாள் எம்பி ராஜேந்திரன் செல்போனில் தொடர்பு கொண்டார். அப்போது 2026 2027 ஆண்டிற்கான பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் வேதாரண்யம் தாலுக்கா சிறுதலைக்காடு கிராமத்திற்கு நிதி ஒதுக்கீடு பரிந்துரை குறித்து கேட்டார்.

அப்போது திட்ட இயக்குனர் பொறுப்பற்ற முறையில் பதில் கூறினார். இதை கண்டித்து காங்கிரஸ் கட்சி சார்பில் இன்று (10ம் தேதி) ஆர்ப்பாட்டம் நடத்துவதாக அறிவித்து இருந்தனர். ஆனால் நாகப்பட்டினம் கலெக்டர் அலுவலகத்தில் அமைச்சர்கள் செங்கோட்டையன், ஷாஜகான், ஸ்ரீநாத் ஆகியோர் பங்கேற்கும் ஆய்வு கூட்டம் நடப்பதால் ஆர்ப்பாட்டம் நடந்த போலீசார் அனுமதி மறுத்தனர்.

இதையடுத்து காங்கிரஸ் கட்சி சார்பில் அமைச்சர்களை சந்தித்து மனு கொடுக்க முன்னாள் எம்பி ராஜேந்திரன் காங்கிரஸ் கட்சியினர் நேற்று நாகப்பட்டினம் கலெக்டர் அலுவலகம் வந்தனர். அப்போது ஏ எஸ்பி பிரியங்கா பார்கவ் தலைமையில் பாதுகாப்பு பணியில் இருந்த போலீசார் இரும்பிலான தடுப்பு கட்டைகளை வைத்து தடுத்தனர். மேலும் கலெக்டர் அலுவலக முதன்மை நுழைவு வாயிலை அடைத்து காங்கிரஸ் கட்சியை சேர்ந்தவர்களை உள்ளே செல்ல அனுமதி மறுத்தனர். இதனால் விரக்தி அடைந்த காங்கிரஸ் கட்சியினர் போலீசாரை கண்டித்து கலெக்டர் அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர். இதனால் அப்பகுதியில் 30 நிமிடம் பரபரப்பு நீடித்தது. பேச்சுவார்த்தைக்கு பின்னர் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த முக்கிய நிர்வாகிகள் அமைச்சரை சந்திக்க அனுமதி அளித்தனர்.

தவெக கூட்டணி கட்சியான காங்கிரஸ் கட்சியை சேர்ந்தவர்களை கூட அமைச்சர்களை சந்திக்க போலீசார் அனுமதி மறுத்த காரணத்தால் தவெக கூட்டணியில் இடம் பெற்றுள்ள காங்கிரஸ் கட்சி முற்றுகையிட்டு போராட்டம் நடத்தியது குறிப்பிடத்தக்கது. இது குறித்து முன்னாள் எம்பி ராஜேந்திரன் கூறியதாவது: நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு வந்த அமைச்சர்களை சந்தித்து மனு கொடுக்க மாலையுடன் காங்கிரஸ் கட்சியினர் வருகை தந்தோம். ஆனால் கூட்டணி கட்சியில் இடம் பெற்றுள்ள காங்கிரஸ் கட்சியை கூட காவலர் விட அனுமதி மறுத்துள்ளனர். இது கண்டித்தக்கது என்றார்.



# காட்டுமன்னார்கோவிலில் காங்கிரஸ் இயக்க மறுசீரமைப்பு

## விருப்பமனு பெறுதல், நேர்காணல்

காட்டுமன்னார்கோவில், செப்.11-

கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோவில் செங்குந்தர் திருமண மண்டபத்தில் காங்கிரஸ் கட்சி சார்பில் “இயக்க மறுசீரமைப்பு திட்டம்” அடிப்படையில் விருப்பமனுக்கள் பெறுதல் மற்றும் நேர்காணல் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மேலிட பார்வையாளர் உதயம் தலைமை தாங்கி, நிர்வாகிகளிடமிருந்து விருப்பமனுக்களை பெற்று நேர்காணல் நடத்தினார்.

இதில் தமிழ்நாடு மாநில காங்கிரஸ் கமிட்டி துணைத் தலைவர் கே.ஐ. மணிரத்தினம், மாவட்ட தலைவர் சித்தார்த்தன், பொதுக்குழு உறுப்பினர் மணிமொழி, பி.டி. குணசேகரன், மாநில இளைஞரணி அரவிந்த் மணிரத்தினம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மேலும் மாவட்ட செயலாளர் அண்ணாதுரை, ஷானு ஜாகிர் உசேன், செல்வம், தம்பியா பிள்ளை, திருவரசு, ராமதாஸ், தியாகராஜன், இளைஞர் காங்கிரஸ் மாவட்ட தலைவர் கிருபாகரன் உள்ளிட்ட பல்வேறு நிர்வாகிகள் பங்கேற்றனர்.

# சென்ட்ரல் ரயில் நிலையம் அருகே 2 கல்லூரி மாணவர்களுக்கு இடையே மோதல்

## காவல் ஆணையர் எச்சரிக்கை

சென்னை, செப்.11-

சென்ட்ரல் ரயில் நிலையம் அருகே பச்சையப்பன் கல்லூரி மற்றும் மாநிலக் கல்லூரி மாணவர்கள் மோதிக்கொண்டனர். இந்த விவகாரத்தை அடுத்து தகராறில் ஈடுபடும் மாணவர்கள் மீது பாரபட்சம் இன்றி நடவடிக்கை எடுக்கப்படும் என காவல் ஆணையர் அமல்ராஜ் எச்சரித்துள்ளார்.

சென்ட்ரல் ரயில் நிலையம் அருகே உள்ள ஆட்டோ ஸ்டாண்டில் நேற்று முன்தினம் மாலை பச்சையப்பன் கல்லூரியை சேர்ந்த சுமார் 20 மாணவர்கள் நின்று பேசிக் கொண்டிருந்தனர். அப்போது அந்த வழியாக மாநிலக் கல்லூரியை சேர்ந்த சுமார் 20 மாணவர்கள் வந்தனர்.

பச்சையப்பன் கல்லூரி மாணவர்களை பார்த்ததும், அருகில் கிடந்த கற்களை எடுத்து அவர்கள் மீது வீசித் தாக்கியுள்ளனர். பதிலுக்கு பச்சையப்பன் கல்லூரி மாணவர்களும் பதிலுக்கு கற்களை வீசித் தாக்குதல் நடத்தினர்.

கற்கள் வீசப்பட்டதில் அவ்வழியாகச் சென்ற மாநகரப் பேருந்தின் கண்ணாடி சேதமடைந்தது. இதனால் அப்பகுதியில் சிறிது நேரம் பதற்றமான சூழல் நிலவியது.

இதுபற்றி பொதுமக்கள் போலீஸாருக்கு தகவல் தெரிவித்தனர். பெரியமேடு போலீஸார் சம்பவ இடத்துக்கு விரைந்தனர். போலீஸாரை பார்த்ததும் மோதலில் ஈடுபட்ட மாணவர்கள் அங்கிருந்து தப்பி ஓடினர்.

போலீஸார் அவர்களை விரட்டியதில், திருவள்ளூரை சேர்ந்த பச்சையப்பன் கல்லூரி மாணவர் ஒருவர் மட்டும் பிடிபட்டார். அவரை காவல் நிலையம் அழைத்துச் சென்று தொடர்ந்து விசாரித்து வருகின்றனர்.

மேலும் தப்பி ஓடிய மாணவர்களை அடையாளம் கண்டு, அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கும் பணியும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், மாணவர்கள் மோதலில் ஈடுபடுவதைத் தவிர்க்க வேண்டும் என்றும், பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் செயல்படுபவர்கள் மீது பாரபட்சம் இன்றி கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என சென்னை காவல் ஆணையர் அமல்ராஜ் எச்சரித்துள்ளார்.



# கீழப்பூங்குடியில் முதியவர் மர்ம மரணம் கழுத்தில் காயங்கள்; கொலையா என போலீசார் விசாரணை

சிவகங்கை. செப்-11

சிவகங்கை மாவட்டம் மதகுபட்டி அருகே உள்ள கீழப்பூங்குடி கிராமத்தில், கழுத்துப் பகுதியில் பலத்த காயங்களுடன் 70 வயது முதியவர் மர்மமான முறையில் உயிரிழந்து கிடந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. கீழப்பூங்குடி பகுதியைச் சேர்ந்த நாராயணன் (70) விவசாயக் கூலி வேலை செய்து வந்ததாக கூறப்படுகிறது. மனைவி ஏற்கனவே உயிரிழந்த நிலையில், தனது இரண்டு மகன்களுடன் வசித்து வந்துள்ளார். இந்நிலையில், வீட்டின் அருகே உள்ள காட்டுப்பகுதியில் நாராயணன் கழுத்தில் ரத்தக் காயங்களுடன் உயிரிழந்து கிடந்ததை அப்பகுதியினர் கண்டதாக கூறப்படுகிறது. தகவல் அறிந்த மதகுபட்டி போலீசார் சம்பவ இடத்துக்கு சென்று உடலை மீட்டு, உடற்கூறு ஆய்வுக்காக சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். சம்பவ இடத்திற்கு சிவகங்கை டி.எஸ்.பி. அமலா அட்மின் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். நாராயணனின் கழுத்துப் பகுதியில் காயங்கள் இருப்பதால், இது கொலை சம்பவமா அல்லது வேறு ஏதேனும் காரணத்தால் ஏற்பட்ட மரணமா என்பது குறித்து மதகுபட்டி போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.



# மாநில சுற்றுலா விருதுகள் 2026: செப்.30-க்குள் விண்ணப்பிக்கலாம்



சிவகங்கை, செப்.11-

உலக சுற்றுலா தினம் 2026-ஐ முன்னிட்டு தமிழக அரசின் சுற்றுலாத்துறை சார்பில் வழங்கப்படும் மாநில அளவிலான சுற்றுலா விருதுகளுக்கு செப்டம்பர் 30-ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என சிவகங்கை மாவட்ட ஆட்சியர் ப. ஆகாஷ் தெரிவித்துள்ளார்.

செப்டம்பர் 27-ஆம் தேதி உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு, தமிழகத்தில் சுற்றுலாத்துறை சார்ந்த சாதனைகள் மற்றும் புதுமைகளை ஊக்குவிக்கும் வகையில் ஆண்டுதோறும் மாநில அளவிலான சுற்றுலா விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அதன்படி, தூய்மையான சுற்றுலாத்தலம், சிறந்த மாவட்டம், சுற்றுலா வழிகாட்டி, சிறந்த சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் கல்வி நிறுவனம், சிறந்த மருத்துவம் மற்றும் ஆரோக்கிய சுற்றுலா நிறுவனம், சிறந்த சாகச மற்றும் தங்கும் முகாம்கள், சிறந்த பயண பங்குதாரர், சிறந்த உள்நாட்டு சுற்றுலா ஏற்பாட்டாளர், தமிழ்நாட்டிற்கான சிறந்த சுற்றுலா ஏற்பாட்டாளர், பல்வேறு சுற்றுலா பிரிவுகளின் சிறந்த ஏற்பாட்டாளர், தங்குமிடம் மற்றும் படகு இல்லம் (TTDC), சிறந்த உணவகம் உள்ளிட்ட 13 பிரிவுகளில் மொத்தம் 31 விருதுகள் வழங்கப்பட உள்ளன.

தகுதியும் விருப்பமும் உள்ள சிவகங்கை மாவட்ட சுற்றுலா தொழில் முனைவோர் இந்த விருதுகளுக்கு விண்ணப்பிக்கலாம். உள்ளாட்சி அமைப்புகளும் தூய்மையான சுற்றுலாத்தலத்திற்கான விருதுக்கு விண்ணப்பி க்கலாம்.

விரும்புவோர் www.tntourismawards.com இணையதளம் வாயிலாக 30.09.2026-க்குள் விண்ணப்பிக்க வேண்டும்.

கூடுதல் விவரங்களுக்கு காரைக்குடி சுற்றுலா அலுவலரை 04565-232348, 9994217107 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சியர் ப. ஆகாஷ் தெரிவித்துள்ளார்.



# திருப்பூரில் குடிநீர் விநியோகம், திட்டப்பணிகள் குறித்து ஆட்சியர் ஆய்வு

திருப்பூர், செப்.11-

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், பொது மக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் மற்றும் குடிநீர் திட்டப்பணிகள் குறித்து மாவட்ட ஆட்சியர் டாக்டர் மனிஷ் நாரணவரே தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், மாநகராட்சி, நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த அலுவலர்களை ஒருங்கிணைத்து நடைபெற்ற கூட்டத்தில், மாவட்டம் முழுவதும் குடிநீர் விநியோக நிலவரம் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

திருப்பூர் மாநகராட்சியின் 60 வார்டுகளில் பல்வேறு திட்டங்களின் கீழ் நாள்தோறும் விநியோகிக்கப்படும் குடிநீர் அளவு குறித்தும், 6 நகராட்சிகள், 15 பேரூராட்சிகள், 13 ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட 265 கிராம ஊராட்சிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள குடிநீர் விநியோக நடவடிக்கைகள் குறித்தும் ஆட்சியர் ஆய்வு செய்தார்.

பொதுமக்களுக்கு சீரான குடிநீர் கிடைப்பதை அலுவலர்கள் உறுதி செய்ய வேண்டும். கிராம ஊராட்சிகளில் குடிநீர் தொடர்பான புகார்கள் வந்தால் உடனடியாக கள ஆய்வு மேற்கொண்டு தீர்வு காண வேண்டும். பொதுமக்களின் கோரிக்கைகள் மீது விரைந்து நடவடிக்கை எடுத்து, அதன் விவரங்களை மாவட்ட நிர்வாகத்திற்கு தெரிவிக்க வேண்டும் என அறிவுறுத்தினார்.

மேலும், குடிநீர் குழாய்களில் பழுது ஏற்பட்டால் உடனடியாக சீரமைக்கவும், சம்ப்கள் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மூலம் பெறப்பட்டு விநியோகிக்கப்படும் குடிநீர் அளவை தொடர்ந்து கண்காணிக்கவும் அறிவுறுத்தப்பட்டது.

பேரூராட்சி, நகராட்சி மற்றும் கிராம ஊராட்சிகளில் நாள்தோறும் விநியோகிக்கப்படும் குடிநீர் அளவை மின்னணு நீர்உந்து கருவிகள் மூலம் கண்காணித்து, தடையின்றி சீரான குடிநீர் விநியோகத்தை உறுதி செய்ய வேண்டும் என ஆட்சியர் தெரிவித்தார்.

கூட்டத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நிர்வாகப் பொறியாளர் செல்வராணி, உதவி இயக்குநர்கள் (ஊராட்சிகள்) கமலக்கண்ணன், சதீஸ்குமார் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



# நல்லாசிரியர் விருது பெற்ற ஹில் போர்ட் பள்ளி துணை முதல்வர் சப்னாவிற்க்கு பாராட்டுக்கள் குவிகிறது

நீலகிரி, செப்.11-

தமிழக அரசு சார்பில் இந்த ஆண்டுக்கான டாக்டர் ராதாகிருஷ்ணன் விருது நீலகிரி மாவட்டம் கோத்தகிரி அருகே உள்ள ஹில் போர்ட் மெட்ரிக் மற்றும் சி பி எஸ் இ மேல்நிலைப் பள்ளியில் துணை முதல்வர் சப்னா தேர்வு செய்யப் பட்டுள்ளார். சிறந்த கல்வி பணியாற்றும் ஆசிரியர்களை கௌரவிக்கும் வகையில் ஆண்டுதோறும் டாக்டர் ராதாகிருஷ்ணன் விருது வழங்கப்பட்டு வரும் நிலையில் இந்த ஆண்டு தனியார் பள்ளிகளில் இவர் மட்டுமே விருது பெற தேர்வு பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. கல்விப் பணியில் அவரது அர்ப்பணிப்பு மற்றும் கடமையை பாராட்டும் வகையில் இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. இவருக்கு பள்ளி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் சமூக ஆர்வலர்கள் பாராட்டு தெரிவித்து வருகின்றனர் .மேலும் சென்னையில் நடைபெற்ற விழாவில் கல்வித்துறை அமைச்சர் நிர்மல் குமார் விருது வழங்கி கௌரவித்தது குறிப்பிடத்தக்கது.




# எச்.ஐ.வி./எய்ட்ஸ், பால்வினை நோய்த்தொற்று விழிப்புணர்வு பிரச்சாரம்

## ஆட்சியர் தொடங்கி வைத்தார்

திருப்பூர், செப்.11-

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில், மாவட்ட எய்ட்ஸ் கட்டுப்பாட்டு பிரிவு சார்பில் எச்.ஐ.வி./எய்ட்ஸ் மற்றும் பால்வினை நோய்த்தொற்று குறித்த தீவிர விழிப்புணர்வு பிரச்சாரத்தை மாவட்ட ஆட்சியர் டாக்டர் மனிஷ் நாரணவரே கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

திருப்பூர் மாவட்டத்தில் IEC Intensified Campaign2026 திட்டத்தின் கீழ், இளைஞர்கள் மற்றும் பொதுமக்களிடையே எச்.ஐ.வி./எய்ட்ஸ் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் 12.08.2026 முதல் 12.10.2026 வரை இரண்டு மாதங்களுக்கு மாவட்டம் முழுவதும் வட்டார, கிராம மற்றும் நகர அளவில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக நடைபெற்ற விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சியர் தொடங்கி வைத்தார். பேரணி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தொடங்கி, எல்.ஆர்.ஜி. அரசு மகளிர் கலைக் கல்லூரி வரை சென்று மீண்டும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை வந்தடைந்தது.

பேரணியில் திருப்பூர் குமரன் மகளிர் கல்லூரியைச் சேர்ந்த 200-க்கும் மேற்பட்ட மாணவிகள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் மாவட்ட சுகாதார அலுவலர் மரு. ஜெயந்தி, வட்டார மருத்துவ அலுவலர் மரு. சுடர்விழி, கல்லூரி மாணவிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# இளையான்குடியில் நீர்நிலைப் பகுதியில் குப்பைக் கிடங்கு அமைக்க முயற்சி

## தடுத்து நிறுத்தக் கோரி ஆட்சியரிடம் மனு!

இளையான்குடி, செப்.11-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட இளையான்குடி பேரூராட்சிக்கு ட்பட்ட குப்பைகளைக் கொட்டுவதற்காக நீர்நிலைப் பகுதியில் அமையவிருக்கும் குப்பைக் கிடங்கை உடனடியாகத் தடுத்து நிறுத்தக் கோரி மாவட்ட ஆட்சியரிடம் மனு அளிக்கப்பட்டுள்ளது. சிவகங்கை மாவட்டம் இளையான்குடி தேர்வுநிலை பேரூராட்சி சார்பில் வளமீட்பு பூங்கா (குப்பைக் கிடங்கு) அமைப்பதற்காக சர்வே எண் 33/4-ல் 1 ஏக்கர் 15 சென்ட் நிலம் தானமாகப் பெறப்பட்டது. இந்தப் பகுதிக்கு அருகே இளையான்குடி பெரிய கண்மாய்க்கான வரத்துக் கால்வாய், திருவுடையார்புரம் கண்மாய், தடியார் உடையார் கோயில் மற்றும் டாக்டர் சாகிர் உசேன் கல்லூரி ஆகியவை அமைந்துள்ளன. இப்பகுதியில் குப்பைக் கிடங்கு அமைந்தால் சுற்றுச்சூழல் கடுமையாக மாசடைவதுடன், கல்லூரி மாணவர்கள், பொதுமக்கள் மற்றும் சுற்றுவட்டார விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் சூழல் உருவானது. இதனைத் தொடர்ந்து இடையவலசை, இந்திரா நகர், கொங்கம்பட்டி, காந்திச்சாலை, அதிகரை, மெய்யனேந்தல் உள்ளிட்ட கிராம மக்கள் கடந்த ஜனவரி 26 கிராம சபைக் கூட்டத்தில் எதிர்ப்புத் தீர்மானம் நிறைவேற்றினர். தொடர்ந்து பேரூராட்சி அலுவலகத்தை முற்றுகையிட்டுப் போராட்டமும் நடத்தினர். அதன் பின்னர், கடந்த மார்ச் மாதம் வட்டாட்சியர், காவல் துறையினர், பேரூராட்சி செயல் அலுவலர் உள்ளிட்ட அதிகாரிகள் முன்னிலையில் அமைதிப் பேச்சுவார்த்தை நடைபெற்றது. அதில், சர்வே எண் 33/4 உள்ள பகுதி சுற்றுச்சூழல் விதிகளுக்குப் பொருந்தாததால் அங்கு குப்பை கொட்டும் திட்டம் கைவிடப்படுவதாகவும், மாற்று இடம் தேர்வு செய்யப்படும் எனவும் அதிகாரிகளால் முடிவெடுக்கப்பட்டது. இந்நிலையில், தற்போது மீண்டும் அதே நீர்நிலைப் பகுதியிலேயே குப்பைக் கிடங்கு அமைப்பதற்கான நடவடிக்கைகளை இளையான்குடி வருவாய்த்துறையும் பேரூராட்சி நிர்வாகமும் மேற்கொண்டு வருவதாகத் தெரியவந்துள்ளது. இதனால் அதிர்ச்சியடைந்த கிராம மக்கள் மற்றும் அமைப்பினர் சார்பில், அமைதிப் பேச்சுவார்த்தை முடிவை மீறி நீர்நிலைப் பகுதியில் குப்பைக் கிடங்கு அமைக்கும் திட்டத்தை உடனடியாக ரத்து செய்து, விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க வேண்டும் என சிவகங்கை மாவட்ட ஆட்சியரிடம் முறையிட்டுள்ளனர்.




# உலக தற்கொலை தடுப்பு தினம்; திருப்பூரில் விழிப்புணர்வு நிகழ்ச்சி

திருப்பூர், செப்.11-

உலக தற்கொலை தடுப்பு தினத்தை முன்னிட்டு, திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரி கலையரங்கத்தில் மனநலத்துறை சார்பில் “தற்கொலை பற்றிய சமூகப் பார்வையை மாற்றுவோம்” என்ற கருத்துருவை மையமாகக் கொண்ட விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு திருப்பூர் மாவட்ட ஆட்சியர் டாக்டர் மனிஷ் நாரணவரே தலைமை வகித்தார். தற்கொலை தடுப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் அது தொடர்பான சமூகப் பார்வையில் மாற்றத்தை உருவாக்குதல் குறித்து நிகழ்ச்சியில் எடுத்துரைக்கப்பட்டது.

இதில் திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு. மனோன்மணி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161